அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

# மக்களின் எதிர்பார்ப்புகளையும், தேவைகளையும் நிறைவேற்றாத ரயில்வே பட்ஜெட்
# சமக நிறுவனர்–தலைவர் ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ அறிக்கை

அ.எண்: 43/2016
தேதி : 25/02/2016

மத்திய ரயில்வே துறை அமைச்சரால் நாடாளுமன்றத்தில் 2016 – 2017 ஆம் ஆண்டுக்கான ரயில்வே பட்ஜெட் மக்களின் எதிர்பார்ப்புகளையும், தேவைகளையும் நிறைவேற்றாத பட்ஜெட்டாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பயணிகள் மற்றும் சரக்குக் கட்டணங்கள் அதிகரிக்கப்படவில்லை என்ற நிம்மதியூட்டும் அறிவிப்பு ஒரு புறம் இருந்தாலும் புதிய ரயில்கள் அறிமுகப்படுத்தப்படவில்லை என்பது ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது.

சுதந்திரம் அடைந்த போது இந்திய ரயில்வே கொண்டிருந்த ரயில் பாதை நீளத்தில் பாதியளவு மட்டுமே கொண்டிருந்த சீனா, இன்று நம்மை விட 4 மடங்கு அதிக நீளமான ரயில்பாதை கொண்டிருக்கிறது என்ற புள்ளி விபரத்தைப் பார்க்கும் போது, இந்தியா ரயில்வே துறைக்கு அளித்துவரும் முக்கியத்துவம் குறைவாகவே உள்ளது என்று கருத வேண்டியுள்ளது.

2500 கி.மீ அளவிற்கு அகலப்பாதை மாற்றம், தினசரி 7 கி.மீ அளவு ரயில்பாதை அமைப்பதை 2018 – 19 ல் 18 கி.மீ அளவிற்கு அதிகரிக்கத் திட்டம், டெல்லி – சென்னை சரக்கு ரயில்பாதைக்கு முன்னுரிமை, புதிதாக இரண்டு ரெயில் எஞ்சின் தயாரிப்பு தொழிற்சாலை, பெண்களுக்கு முன் பதிவில் 33 சதவிகித இட ஒதுக்கீடு, தமிழ்நாட்டில் வேளாங்கண்ணி, நாகப்பட்டினம் ரெயில் நிலையங்கள் மேம்பாடு, மூத்த குடிமக்களுக்கு கீழ்ப்படுக்கை வசதி 50 சதவிகித அதிகரிப்பு, சில ரயில் நிலையங்களில் நவீன வசதிகள் ஏற்படுத்துதல் போன்ற சில அம்சங்களைத் தவிர வேறு சிறப்பம்சங்கள் இந்த பட்ஜெட்டில் அறிவிக்கப்படவில்லை. மொத்தத்தில் பலத்த எதிர்பார்ப்புகளுக்கிடையே, ரயில்வே பட்ஜெட் சாதாரணமான பட்ஜெட்டாக அறிக்கப்பட்டுள்ளது என்றே கருதலாம்.

நன்றி,வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்